# உரையாடல் - 3

**பங்குபெறுபவர்கள் :- செல்வன், செல்வி**

**செல்வன்** : செல்வி நீ எத்தனை மணிக்கு எழுந்தாய்?

**செல்வி** : நான் ஆறு மணிக்கு எழுந்தேன்.

**செல்வன்** : நீ வீட்டுப்பாடம் எழுதிவிட்டாயா?

**செல்வி** : நான் வீட்டுப்பாடம் எழுதி விட்டேன்.

**செல்வன்** : இன்று எங்க வீட்டில் பூரி. உங்க வீட்டில் என்ன?

**செல்வி** : இன்று எங்க வீட்டில் தோசை.

**செல்வன்** : இன்று தமிழ் தேர்வுக்கு நீ படித்துவிட்டாயா?

**செல்வி** : நான் படித்துவிட்டேன், நீ படித்துவிட்டாயா?

**செல்வன்** : நானும் படித்துவிட்டேன்.

**செல்வி** : உன்னிடம் எத்தனை பேனா உள்ளது?

**செல்வன்** : மூன்று பேனா உள்ளது.

**செல்வி** : எனக்கு ஒரு பேனா கொடு.

**செல்வன்** : சரி, வா பள்ளிக்கு செல்லலாம்.

**செல்வி** : நன்றி செல்வா.

**செல்வன்** : செல்வி, நீ நன்றாக தேர்வு எழுத எனது வாழ்த்துக்கள்.

**செல்வி** : நன்றி செல்வா. உனக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

www.kids.noolagam.com